# பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர் குழு இலங்கைக்கான விஜயத்தினை நிறைவுசெய்கின்றது

2025 ஏப்பிறல் 11

பணிக்குழு வருகையின் பின்னரான ஊடக வெளியீடுகள் நாடொன்றிற்கான விஜயமொன்றினைத் தொடர்ந்து பூர்வாங்கக் கண்டறிகைகளைத் தெரிவிக்கின்ற பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர் குழுக்களின் அறிக்கைகளை உள்ளடக்கின்றன. இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களின் கருத்துக்களேயன்றி பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் கருத்துக்களைப் பிரதிபலிக்கவேண்டும் என்ற அவசியம் காணப்படுவதில்லை.

- *பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர் குழுவானது பொருளாதாரச் செயலாற்றம் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழான நான்காவது மீளாய்விற்குத் துணைபுரிகின்ற கொள்கைகள் குறித்து இலங்கை அதிகாரிகளுடன் மிகவும் பயனுள்ள கலந்துரையாடல்களை மேற்கொண்டது.*
- *உலகளாவிய நிச்சயமற்றதன்மையானது தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்படுவதுடன் நிதியியல் சந்தைத் தளம்பலிற்குப் பங்களிக்கின்றது. அரசாங்கமானது நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்கள் குறித்து தொடர்ந்தும் அர்ப்பணிப்புடனுள்ளதுடன் நடைமுறைப்படுத்தலானது வலுவானதாகவும் பாராட்டத்தக்கதாகவும் காணப்படுகின்ற போதிலும், வெளிநாட்டு அதிர்வின் இலங்கைக்கான தாக்கங்களை மதிப்பிடுவதற்கு அதிகளவிலான காலம் தேவைப்படுகின்றது.*
- *அதிகரித்தளவிலான உலகளாவிய நிச்சயமற்றதன்மையினைக் கொண்டுள்ள இக்காலப்பகுதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான சீர்திருத்த உத்வேகத்தினைப் பேணும் வழி அலகுகள் மற்றும் கொள்கைகள் குறித்து அண்மைய காலத்தில் உடன்பாட்டினை எட்டுவதுடன் தொடர்புடைய கலந்துரையாடல்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.*

**கொழும்பு, இலங்கை:** இவான் பாபகேர்ஜியோ தலைமையிலான பன்னாட்டு நாணய நிதியத்தின் குழுவொன்று 2025 ஏப்பிறல் 3 தொடக்கம் 11 வரையான காலப்பகுதியில் கொழும்பிற்கு விஜயம் செய்தது. கொழும்பில் நடைபெற்ற ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களிற்குப் பின்னர் திரு. பாபகேர்ஜியோ பின்வரும் அறிக்கையை வெளியிட்டார்:

“பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட இலங்கையின் பேராவல்மிக்க சீர்திருத்த நிகழ்ச்சிநிரலானது பாராட்டத்தக்க பெறுபேறுகளைத் தொடர்ந்து விளைவிக்கின்றது. நெருக்கடிக்குப் பின்னைய வளர்ச்சி 2024இல் 5 சதவீதம் கொண்ட மீளெழுச்சியொன்றினைப் பதிவுசெய்துள்ளமையானது குறிப்பிடத்தக்கதொன்றாகக் காணப்படுகின்றது. பணவீக்கமானது அண்மைய காலாண்டுகளில் கணிசமானளவு வீழ்ச்சியடைந்ததுடன் 2025 மாச்சு இறுதியில் -2.6 சதவீதத்திற்குக் குறைவடைந்துள்ளது. மத்திய வங்கியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கணிசமானளவிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகளுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2025 மாச்சு இறுதியில் ஐ.அ.டொலர் 6.5 பில்லியன் தொகைக்கு அதிகரித்தன. கணிசமானளவிலான இறைச் சீர்திருத்தங்கள் பொது நிதியங்களை வலுப்படுத்தியுள்ளன.

“அண்மைய வெளிநாட்டு அதிர்வு மற்றும் வளர்ச்சியடைந்து வருகின்ற அபிவிருத்திகள் என்பன சுய பொருளாதார நெருக்கடியிலிருந்து இன்னமும் மீட்சியடைந்து கொண்டிருக்கின்ற இலங்கைப் பொருளாதாரத்திற்கு நிச்சயமற்றதன்மையினை உருவாக்குகின்றன. உலகளாவிய அதிர்வின் தாக்கத்தினையும் பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் வரையறைகளினுள் இலங்கைக்கான தாக்கங்களை எவ்வாறு நிவர்த்திசெய்ய முடியுமென்பதனையும் மதிப்பிடுவதற்கு அதிகளவிலான காலம் தேவைப்படுகின்றது.

“நிகழ்ச்சித்திட்டக் குறிக்கோள்களிற்கான அரசாங்கத்தின் நிலையான அர்ப்பணிப்பானது கொள்கையின் தொடர்ச்சியை நிச்சயப்படுத்துகின்றதுடன் நிகழ்ச்சித்திட்ட நடைமுறைப்படுத்தல் தொடர்ந்தும் வலுவாகக் காணப்படுகின்றது. முன்னோக்கிச் செல்கையில், நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடின உழைப்பினால்

வென்றெடுக்கப்பட்டவற்றினைப் பாதுகாப்பதற்கும் நிலைபேறான பேரண்டப்பொருளாதார உறுதிப்பாடு மற்றும் அனைவரையுமுள்ளடக்கிய உயர்ந்தளவிலான வளர்ச்சி என்பவற்றினை நோக்கிய பாதையொன்றில் பொருளாதாரத்தினை இடம்பெறச்செய்வதற்கும் சீர்திருத்த உத்வேகத்தினை நீடித்துநிலைத்திருக்கச்செய்வதானது இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது.

"அதிகரித்தளவிலான உலகளாவிய நிச்சயமற்றதன்மையினை எதிர்கொள்வதற்கு, நீடித்துநிலைத்திருக்கின்ற அரசிறைத் திரட்சி முயற்சிகள் மற்றும் 2025 வரவு செலவுத்திட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்திலான முன்மதியுடைய வரவு செலவுத்திட்ட நிறைவேற்றம் என்பன வரையறுக்கப்பட்ட இறை இடைவெளியினைப் பாதுகாப்பதற்கு முக்கியமானவையாயுள்ளன. செயற்றிறன்மிக்க மற்றும் காலந்தவறாத பெறுமதி கூட்டப்பட்ட வரி மீளளிப்புப் பொறிமுறையொன்றினை மீள்நடைமுறைப்படுத்தல் உள்ளடங்கலாக வரி இணங்குவிப்பினை அதிகரித்தலானது மேலதிக வரிக் கொள்கை வழிமுறைகளை மேற்கொள்ளாமல் அரசிறை இலாபமீட்டல்களிற்குப் பங்களிக்கத் துணைபுரியும். புதிய வரி விலக்களிப்புக்களைத் தவிர்த்தலானது அரசிறைக் கசிவுகள் மற்றும் ஊழல் இடர்நேர்வுகள் என்பவற்றை குறைப்பதற்கும் இலங்கையின் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு சமூகச் செலவிடல் உள்ளடங்கலாக மிகவும் அவசியமான இறைத் தாங்கியிருப்புக்களைக் கட்டியெழுப்புவதற்கும் உதவும். மின்சார விலையிடலில் செலவு மீட்சியினை மீட்டெடுத்தலானது அரசிற்குச் சொந்தமான மின்சாரத் தொழில்முயற்சிலிருந்து தோற்றம்பெறுகின்ற இறை இடர்நேர்வுகளைக் குறைப்பதற்குத் துணைபுரியும்.

"இந்நிச்சயமற்ற தருணத்தில் ஏழ்மையிலுள்ளவர்களையும் பாதிக்கப்படக்கூடியவர்களையும் பாதுகாக்கும் முக்கிய பொறுப்பு அரசாங்கத்திடம் காணப்படுகின்றது. சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்களின் இலக்கிடல், போதுமாந்தன்மை மற்றும் உள்ளடக்கம் என்பவற்றினை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மீள்இரட்டிப்பாக்குவது முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது. இறை ஆதரவானது நன்கு இலக்கிடப்பட்டு, காலவரையறைக்குட்பட்டு, தற்போதுள்ள வரவு செலவுத்திட்டக் கட்டமைப்பினுள் காணப்பட வேண்டும்.

"பணவீக்கம் தாழ்ந்தளவில் காணப்படுகின்ற வேளையில், நீடித்துநிலைத்திருக்கின்ற விலை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கும் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டிற்கு ஆதரவளிப்பதற்கும் தொடர்ச்சியான கண்காணிப்பு தேவைப்படுகின்றது. தற்போதுள்ள உலகளாவிய நிச்சயமற்றதன்மையினை எதிர்கொள்வதற்கு, ஒதுக்குத் திரட்சியினூடாக வெளிநாட்டுத் தாங்கியிருப்புக்களின் தொடர்ச்சியான மீள்கட்டியெழுப்பலானது தொடர்ந்தும் முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது.

"கலந்துரையாடல்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் மின்சார விலையிடலின் செலவு மீட்சியை மீட்டெடுத்தல், வரி விலக்களிப்புக் கட்டமைப்பினை வலுப்படுத்தல் மற்றும் ஏனைய முக்கியமான கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் என்பவற்றில் முன்னேற்றத்தினை ஏற்படுத்துவதற்கு அதிகாரிகள் தொடர்ந்து ஊக்குவிக்கப்படுகின்றனர்.

"பன்னாட்டு நாணய நிதியக் குழு மாண்புமிகு சனாதிபதியும் நிதி அமைச்சருமான அநுர குமார திஸாநாயக்க, கௌரவ பிரதமர் முனைவர். ஹரினி அமரசூரிய, கௌரவ தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான பிரதி அமைச்சர் பேராசிரியர். அனில் ஜயந்த பர்ணாந்து, நிதி மற்றும் திட்டமிடல் கௌரவ பிரதி அமைச்சர் முனைவர். ஹர்ஷன சூரியப்பெரும, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர். பி. நந்தலால் வீரசிங்க, திறைசேரியின் செயலாளர் திரு. கே. எம். மஹிந்த சிறிவர்த்தன, சனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ மற்றும் ஏனைய சிரேஷ்ட அரசாங்க மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள் ஆகியோருடன் சந்திப்புக்களை நடாத்தியது. பாராளுமன்ற உறுப்பினர்கள், தனியார் துறையிலிருந்தான பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அபிவிருத்திப் பங்காளர்கள் ஆகியோரையும் குழு சந்தித்தது.

"பணிக்குழுவின் விஜயத்தின் போதான சிறப்பான ஒத்துழைப்பிற்காக அதிகாரிகளுக்கு நாம் நன்றி கூறுகின்றோம். நான்காவது மீளாய்வின் காலந்தவறாத நிறைவிற்கு வழி வகுக்கும் விதத்தில் அண்மைய காலத்தில் அலுவலர் மட்ட உடன்பாட்டினை எட்டும் இலக்குடன் கலந்துரையாடல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்நிச்சயமற்ற காலத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான எமது அர்ப்பணிப்பினை நாம் மீளுறுதிப்படுத்துகின்றோம்."